# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

**O.S. No. 107/2013** **(வா.சா- 2)**

2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் நாள் செவ்வாய்கிழமை **திருமதி.P.K.தமயந்தி,எம்.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சந்திரசேகர் | | |
| த/பெ. | : | சமயம் | : |
| க/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுகா | : | | |

**முதல் விசாரணை**

நான் பல்லடம், மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் பல்லடம் வட்டாட்சியருக்காக சாமளாபுரம் கிராமத்தில் பட்டா எண் 1146 ல் பெயர்கள் சேர்க்கப்பட்டது தொடர்பான வழக்கிற்க்கு பல்லடம் வட்டாட்சியரின் அனுமதிபெற்று சாட்சியம் அளிக்கிறேன். பல்லடம் வட்டம், சாமாளபுரம் கிராமம் பட்டா எண் 1146 ல் 1, 2 ஆம் பிரதிவாதிகளின் பெயர்கள் எந்த தேதியில், எந்த நடவடிக்கையின் கீழ் சேர்க்கப்பட்டது என்ற விவரத்தை காண்பிப்பதற்கான ஆவணங்கள் அழைப்பாணையில் கேட்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேடிப்பார்த்த வகையில் கிடைக்கப் பெறவில்லை. பட்டா மாறுதல் மனுதாக்கல் செய்யப்படும் போது உரிய ஆவணங்களுடன் தாக்கல் செய்யப்படும். மனுதாக்கல் செய்யப்பட்டால் மனுவிற்கு மனு எண் கொடுக்கப்பட்டு நில வருவாய் ஆய்வாளர், வருவாய் அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று அதனடிப்படையில் பட்டா பெயர்மாற்றம் செய்யப்படும். தற்போது கணினி முறையில் அதற்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. கணினி பயன்பாட்டிற்கு முன்பு வருவாய் அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கை பெற்று விசாரணைக்குப் பிறகு வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் உத்தரவு நகல் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதனடிப்படையில் பட்டாவில் பெயர் மாற்றம் செய்யப்படுவது நடைமுறை. அவ்வாறு வட்டாட்சியரின் உத்தரவு, கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பப்பட்ட பின்பு பெயர்கள் சேர்க்கப்படுவதை குறித்து பதிவுகள் உரிய பதிவேடுகளில் பதிவேற்றப்படும். பதிவேடுகளில் பதிவேற்றப்பட்டு அதன் நகல் வட்டாட்சியருக்கு அனுப்பபடுவதில்லை. கிராம நிர்வாக அலுவலர் பதிவேடுகளில் பதிவேற்றி ஆவணங்களை அலுவலகத்தில் பராமரித்து வருவார். கிராம நிர்வாக அலுவலரால் பதியப்படும் பதிவேடுகளை நான் பார்க்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

பட்டா என்பது ஒரு நிரந்தரமான ஆவணமா என்றால் இல்லை. சம்பந்தப்பட்ட சொத்துகள் மாற்றப்படும் போது பட்டாவில் உள்ள பெயரும்

மாற்றப்படும். பட்டா என்பது நிரந்தரமான ஆவணம்தான். அதில் உள்ள பெயர்கள் மட்டும் சொத்துகள் மாற்றப்படும்போது மாற்றப்படும். சாமளாபுரம் கிராமம் காலை எண் 89 ல் 17 உட்பிரிவுகள் உள்ளது.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

/sd/ P.K.Dhamayanthi
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்